**கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேகப்பாதை செயற்திட்டம் - 2014**

-----------------------------------------------------------------------------------------------------

கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செயற்திட்டமானது 2009 ஆகஸ்ட் 6 இல் சீனா எக்ஸிம் வங்கிக்கும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் இடையில் கைச்சாத்திட்டப்பட்ட கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2. செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

-----------------------------------------------------------------------------------------------------

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முறையே நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஏறத்தாழ 25.8 கி.மீ. நீளத்தில் மணித்தியாலம் ஒன்றிற்கு 80 கி.மீ தொடக்கம் 100 கி.மீ வரையான அதிவேகப் பாதையாக நான்கு வரிசைகளாக பிரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட வேண்டுமென்பது நோக்கமாகும். நான்கு பகுதிகளிற்குள் அதிவேகப் பாதையின் நிர்மான வேலைகளைப் பிரிப்பதற்கான அங்கீகாரத்தை 2008 ஆகஸ்ட் 14 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவை வழங்கியிருந்ததுடன் தனியொரு செயற்திட்டமாக அமுலாக்குவதற்கு சீன மெற்றலியுரிக்கல் குழு கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது. மேலும், 2008 செப்தெம்பர் 11 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவை அதிவேகப் பாதையை நிர்மாணிப்பதற்காக ரூபா 34,722 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 292 மில்லியன் ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 29,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 248.2 மில்லியன் அல்லது 85 சதவீதம் கடன் பெறுவதற்கு சீன எக்சீம் வங்கியுடன் நான்கு ஒப்பந்தங்கள் கைசாத்திடுவதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 ஆகஸ்ட் 18 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஒக்தோபரில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்

கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், ஆகும்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 100,532,613 தொகையான வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட மீதி செயற்திட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 101,523,613 ஆன மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டின் போதான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போதான | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| எக்சீம் வங்கி | 248.2 | 29,750 | - | - | - | 248 | 29,730 |
| இலங்கை அரசாங்கம் | 43.8 | 4,972 | 487 | - | 487 | - | 12,589 |
| உரிய அமைச்சு | - | - | | - | 38 | - | 38 |
| உள்நாட்டு வங்கி கடன் | - | 5,897 | | - | 2,785 | - | 2,785 |
| மொத்தம் | 292.0 | 40,619 | 487 | - | 3,310 | 248 | 45,142 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2000 ஒக்தோபரில் கொரிய குடியரசின் நிர்மாண கம்பனியொன்றிற்கு ரூபா 9,516 மில்லியன் கிரயத்தில் ஆரம்பத்தில் வழங்கப்பட்டதுடன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டு 2003 இல் கைவிடப்பட்டது. ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்ட நேரத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மொத்த ஒப்பந்த பெறுமதியின் 57 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,444 மில்லியன் தொகையை செலவழித்திருந்தது. பின்னர் 2008 இல் தயார்படுத்தல் ஒப்பந்தத்திற்காக ரூபா 34,722 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 292 மில்லியனில் மிகுதி நிர்மாண வேலைகளை பூர்த்திசெய்வதற்கு சீன மற்றெழுஜிக்கல் குழு கூட்டுத்தாபனத்திற்கு நிர்மாண வேலைகள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிர்மாண வேலைகளின் கிரயம் புதிய களணி பால உள்ளகமாற்ற நிர்மாணம், கிணுப்பிட்டிய வீதி மறியல், கட்டுநாயக்க நுழைவில் வடிவமைப்பு மாற்றம், கரவெலப்பிட்டிய உள்ளக மாற்றத்தில் மேலதிக வேலைகள், ஜ எலவில் மேலதிகமாக 02 காசேகரிப்பு நிலையம், மதகுகளின் திருத்தப்பட்ட அளவு போன்ற வேலைகளின் நோக்கெல்லையின் மாற்றங்கள் போன்றன மற்றும் அவற்றின் மீதான விலைத்தளம்பல்கள் போன்ற பல காரணங்களால் ரூபா 40,619 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. மேலதிக கிரயத்தை நிதியளிப்பதற்கு சீன எக்சிம் வங்கியிடமிருந்து மேலதிக கடனை பெறுவதற்கு 2013 யூலை 26 இல் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்நாட்டு வர்த்தக வங்கி ஒன்றிடமிருந்து ரூபா 5,897 மில்லியன் கடன் வசதியை ஒழுங்குசெய்திருந்தது. அதிவேகப்பாதையின் நிர்மாண வேலைகள் 2013 ஒக்தோபர் 27 இல் பூர்த்தியாக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிலப் பண்படுத்தல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட கடல் மணலை வழங்குவதற்கு வீதங்களின் தொடர்ச்சியான அதிகரிப்பின் மீது மேலதிக கிரயத்தை ஏற்படுவதற்கு ஒப்பந்தகாரரின் நிராகரித்தல் காரணமாக செயற்திட்டத்தால் ரூபா 256.41 மில்லியன் தொகையான மேலதிக கிரயம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கோப்பில் இல்லாத 04 ஆலோசனையாளர்களிற்கான சம்பளங்கள் மற்றும் வாகன வாடகை கட்டணங்கள் போன்றவற்றிற்தாக மீளாய்வாண்டின் போது ரூபா 22.81 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நாளாந்த வருகைப்பதிவுகள், வேலை ஒதுக்கீடுகள் அல்லது செய்யப்பட்ட வேலை அறிக்கைகள் போன்றன செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஆலோசனையாளரின் பங்களிப்பை நிருபிப்பதற்கு கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**3.4 காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள்**

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீதி நிர்மாணத் திட்டத்தின் பிரகாரம், அதிவேகப்பாதையின் நிர்மாணத்திற்காக 2,583 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 வரை 2,571 காணித்துண்டுகள் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்டவற்றுடன் தொடர்புபட்ட சுவீகரிக்கப்பட்ட காணித்துண்டுகளில், 1,251 காணித்துண்டுகள் மாத்திரம் காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் காணிப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீட்டு தீர்ப்பனவின் தாமதத்தின் மீது செயற்திட்டத்தால் ரூபா 380.42 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தது. சில வட்டிக் கொடுப்பனவுகள் 10 ஆண்டுகளிற்கு மேலாக இழப்பீட்டு தீர்ப்பனவு தாமதத்தில் செய்யப்பட வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றலிற்காக பேலியகொடவில் மீஹாகவத்தவில் காணிச் சுவீகரிப்பு நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2001 இல் ரூபா 1.79 மில்லியன் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சொல்லப்பட்ட காணியின் உரிமையாண்மை 2014 திசெம்பர் 31 வரையும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இந்த நிலமை மீள்குடியேற்றப்பட்ட நபர்களிற்கு உரிமையாண்மை மாற்றுவதிலுள்ள தாமதத்தில் விளைந்திருந்தது.

(ஈ) 2004 சனவரி 21 இல் வெளியிடப்பட்ட 1324/19 ஆம் இலக்க வர்த்தமாணி அறிவித்தலின் கீழ் சுவீகரிக்கப்பட வேண்டிய காணித்துண்டுகளில், அத்தகைய காணிகளின் முன்னைய உரிமையாண்மையிலுள்ள தகராறு காரணமாக 10 ஆண்டுகளிற்கு மேலாக இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 14 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 விதிவிலக்கான நடவடிக்கைகள்**

செயற்திட்டமானது 2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப்பாதையின் திறப்புவிழா நடவடிக்கைகளிற்காக முறையே ரூபா 10.79 மில்லியன் மற்றும் ரூபா 46.54 மில்லியன் தொகைகள் ஏற்படுத்தியிருந்தது. திறப்பு விழா செலவினத்தின் மதிப்பீடு மற்றும் அங்கீகார விபரங்கள் கணக்காய்விறகு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.